மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதிகமான அளவு மாவட்டக் கல்வி அதிகாரிகளைப் போடவேண்டும் என்று இருந்தாலும், நிதிப் பற்றாக்குறையையொட்டி, அதற்கான முயற்சிகள் மெல்ல மெல்லத்தான் மேற்கொள்ளப்படுகின்றன. தர்மபுரி மாவட்டத்தில் ஒரே ஒரு மாவட்டக் கல்வி அதிகாரி இருப்பதால் இன்னொரு மாவட்டக் கல்வி அதிகாரியைப் போட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் இந்த வினா எழுப்பப் பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : எல்லா மாவட்டங்களுக்கும் சீஃப் எஜுகேஷனல் ஆபீசர்கள் இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது சேலம்-தருமபுரி இரண்டுக்கும் சேர்ந்து ஒரு சீஃப் எஜுகேஷனல் ஆபீசர் இருப்பதால் தாமதங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சீஃப் எஜுகேஷனல் ஆபீசர் நியமிக்கப்படுவாரா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பெரிய மாவட்டத்திற்குப் பக்கத்தில் இருக்கும் சிறிய மாவட்டத்தையும் சேர்த்து ஒரே மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த வகையில் தான் கோயம்புத்தூருக்கும், நீலகிரிக்கும் சேர்த்து ஒரு தலைமைக் கல்வி அதிகாரியும், திருநெல்வேலிக்கும், கன்னியாகுமரிக்கும் சேர்த்து ஒரு தலைமைக் கல்வி அதிகாரியும், சேலம், தருமபுரி இரண்டுக்கும் சேர்த்து ஒரு தலைமை கல்வி அதிகாரியும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தருமபுரி மாவட்டத்திற்குத் தனித் தலைமைக் கல்வி அதிகாரி போடவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக் கிறார்கள். அது இனிமேல் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று.

* 498 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether it is a fact that a number of posts of District Educational Officers and Chief Educational Officers have been kept vacant since October 1969; and

(*b*) if so, he details therefor?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

திரு. எஸ். முருகையன் : வடார்க்காடு மாவட்டத்தில் நான்கு மாவட்டக் கல்வி அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களில் மூன்று பேர்கள் பெண்களாக இருக்கிறார்கள். பெண்களாக இருப்பதால் அவர்கள் பல பகுதிகளுக்கும் சென்று சுற்றிப்பார்க்க முடியாத நிலை இருக்கிறது. மாவட்டத்தில் ஒருவர் மட்டும் பெண் கல்வி அதிகாரியாக இருக்கலாம் என்று வைத்துவிட்டு, மற்ற மூவர் ஆண் அதிகாரிகளாக நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பணிகள் எப்படி இருக்கின்றன என்றுதான் பார்க்க வேண்டும். அவர்கள் ஆண்களா, பெண்களா என்று பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. மாவட்டக் கல்வி அதிகாரிப் பொறுப்பேற்றுக்கொண்டிருப்பவர்களுக்கு ஜீப் வழங்கப்பட்டிருக் கிறது. அவர்கள் ஆண்களாக இருந்தாலும் பெண்களாக இருந்தாலும் அவர்கள் பணிகளை சிறப்புச் செய்யலாம். மாவட்டத்திற்கு இத்தனை பேர் தான் பெண்கள், இத்தனை பேர்தான் ஆண்கள் என்று வரையறை செய்ய இயலாது.

திரு. ஏ. ஆர். சுப்பையா: ஆண்களைவிட பெண்கள் உண்மையாக உழைப்பார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது அந்தந்த இடங்களைப் பொறுத்தும், அவரவர்களைப் பொறுத்தும் உள்ள அனுபவமாகத்தான் இருந்திருக்கும். (சிரிப்பு)

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த ஆண்டு புதிதாக டிஸ்ட்ரிக்ட் எஜுகேஷனல் ஆபீசர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஏதாவது குறிப்புகள் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அண்மையில் மூன்று மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரிகள் ஓய்வு பெறுகிறார்கள். அதற்கான அளவு அந்த இடங்கள் நிரப்பப்பட வேண்டும். இராமனாதபுரம் மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி இடமும் இப்பொழுது காலியாக இருக்கிறது. அதற்கும் ஒரு தலைமைக் கல்வி அதிகாரி நியமிக்கப்பட வேண்டும்.

Bomb explosion in Girls' High School at Madurai.

*499 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(a) whether a number of girl students were injured on or about the 13th January 1971 in a Girls' High School at Madurai by bomb explosion; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: மதுரையில் கேப்ரின் ஹாலில் இருக்கும் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் ஒரு நாள் வெடிப்பு ஏற்பட்டு ஒரு பெண்ணுக்குக் காயம் ஏற்பட்டதே, அதுசம்பந்தமாகத் தொடர்ந்து புலன் விசாரணை நடந்ததே அதற்கும் இதற்கும் சம்பந்தம் உண்டு அல்லவா? தேதியில் வேண்டுமென்றால் சிறிது மாறுதலாக இருக்கலாம். இந்த ஆண்டு ஆரம்பத்தில்தான் நடந்தது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றி அங்கேயிருக்கின்ற இன்ஸ்பெக்ட்ரஸ் ஆஃப் கர்ல்ஸ் ஸ்கூல்ஸ்ஸை கேட்டதில், 'அப்படிப்பட்ட சம்பவம் ஒன்றும் மதுரைப் பகுதியில் நடைபெறவில்லை' என்றுதான் தகவல் அனுப்பி வைத்திருக்கிறார்.

'It has been reported that no such occurrence took place in any of the Girls' High School in Madurai' என்றுதான் குறிப்பு வந்திருக்கிறது.

Valuation of S.S.L.C. examination papers.

*500 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(a) the total number of teaching staff employed for valuing S.S.L.C. papers during April 1971; and

(b) the centres to which they were assigned?